*2*

# அவர்கள் "தங்கள் பொக்கிஷங்களைத் திறந்தனர்"

*ஆபிரகாம் ஆடுமாடுகளில் ஐசுவரியம் உள்ளவராக இருந்தார். அவர் தம்மிடம் இருந்த மிருக ஜீவன்களிலேயே மிகச்சிறந்தவற்றைத் தேவனுக்கு மகிழ்ச்சியுடன் பலிசெலுத்தியிருக்க முடியும், அவ்வாறே அவர் பலிசெலுத்தி யிருப்பார், ஆனால் அவரது மிகச்சிறந்த மிருகஜீவன்களைத் தேவன் கேட்கவில்லை. அவர் ஆபிரகாமுக்கு மிகவும் விலைமதிப்புள்ள ஒன்றை - அவர் மகிழ்வுடன் தமது உயிரையே கையளிக்க விருப்பமாயிருந்த அவரது ஒரே மகனைக் கேட்டார். ஆபிரகாம் தமது வீட்டில் வேலையாட்களைக் கொண்டிருந்தார். அவர்களில் ஒருவரைத் தேவன் கேட்காதிருந்தது ஏன்? தேவன் நீண்டகாலம்-நிலைத்திருக்கும் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றத் தரப்பட்ட, ஈசாக்கு என்ற மகனைக் கேட்டார். ஆபிரகாம் தம்மைத் தேவன் பெரிய இனமாக்கத் தமது மகனைச் சார்ந்திருந்தார். ஆதியாகமம் 22:3ம் வசனம், "இல்லை, ஆண்டவரே, ஈசாக்கையல்ல! ஈசாக்கைத் தவிர எதை வேண்டுமென்றாலும் தருகிறேன்! ஆண்டவரே, ஈசாக்கை நான் வைத்துக்கொள்ளும்படி, தயவுசெய்து அனுமதியும்" என்று கூறியிருந்தால் நான் வியப்புற்றிருக்கமாட்டேன். என்ன ஒரு பலி! இன்றைய நாட்களில் ஆராதனையானது பலியைக் கேட்கிறதா?*

*ஞானிகள் இயேசுவை ஆராதிக்கச் சாஷ்டாங்கமாய் [தரையிலே] விழுந்து, "தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத் தையும் வெள்ளைப்போளத்தையும் அவருக்குக் காணிக்கையாக வைத்தார்கள்" (மத்தேயு 2:11). ஆம், ஆராதனையானது மதிப்புமிகுந்த கொடையை - தியாகம் நிறைந்த கொடையை கேட்கிறது. அரசர்களின் கிரீடங்கள் பொன்னால் செய்யப்படுகின்றன. அரண்மனைகளும் கோவில்களும் விலைமதிப்பு வாய்ந்த இவ்வுலோகத்தைக் கொண்டு அலங்கரிக்கப்படுகின்றன. பொன் என்பது ராஜரீகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது, இது அரசருக்குப் பொருத்தமான கொடையாக உள்ளது.*

*தூபவர்க்கம் என்பது எவ்வகையான கொடையாக உள்ளது? தூபவர்க்கம் செலுத்தும் பீடம் ஒன்று ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தில், பரிசுத்த ஸ்தலத்தை மகாபரிசுத்த ஸ்தலத்தில் இருந்து பிரிக்கும் திரைக்கு முன்னால் இருந்தது. அந்தப் பீடத்தில் எரிக்கப்பட*

வேண்டிய தூபவர்க்கத்தைச் செய்வதற்கு மோசேக்கு விசேஷித்த தயாரிப்பு முறைமை தரப்பட்டிருந்தது. தூபவர்க்கம் என்பது நறுமணப் பொருளாக எரிக்க வேண்டிய கூட்டுப்பொருளில் சேர்க்கப்பட வேண்டிய ஒரு பொருளாக இருந்தது, இது தேவனுக்குச் செலுத்தும் ஆராதனையின் சுகந்த வாசனையாக இருந்தது. இந்த தூபவர்க்கம் பரிசுத்தமானதாக, அந்தப் பீடத்தில் மாத்திரம் மற்றும் தேவனுக்கு ஆராதனையில் மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டியதாக இருந்தது (யாத்திராகமம் 30:34-38).

தூபவர்க்கம் என்பது என்றும் பசுமையாயிருக்கும் மரம் ஒன்றின் பிசினில் இருந்து செய்யப்பட்டது, அது இன்றைய நாட்களிலும் கிழக்கு நாடுகளில் சில மதச்சடங்காச்சாரங்களில் பயன்படுத்தப்படுகிறது.[1] இந்தப்பொருள் நெருப்புடன் எரிக்கப்படும்போது மாத்திரம் தனது இனிய நறுமணத்தைக் கொடுக்கிறது. ஆல்ஃபிரெட் P. கிப்ஸ் என்பவர் இது இயேசுவின் பாவம் இல்லாத வாழ்வின் நறுமணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்று கருத்துத் தெரிவித்தார்.[2] இந்த பலியானது தேவனுக் கென்று தியாகம் செய்யப்பட்ட வாழ்வையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருக்கக்கூடும், ஒருவர் அக்கினியால் சோதிக்கப்பட்டும் (1 பேதுரு 1:7ஐக் காணவும்) தேவனை உண்மையாய் ஆராதிப்பவராக நிலைத்திருத்தல் என்பதன்மூலம் மாத்திரம் தனது இனிய நறுமணத்தைத் தரமுடியும். "நமது முழுமையான இருப்பின் (தூபவர்க்கத்தின் பீடம்) அக்கினிமயமான பலி என்பது நமது ஆராதனையின் இனிய நறுமணத்தை விடுவிக்கிறது."[3]

வெள்ளைப்போளம் என்பது, பால்ஸம் என்ற உயிரினவகையின் மரத்தில் இருந்து வருகிற பிசின்[4] என்ற பொருளும், ஆசரிப்புக்கூட ஆராதனையுடன் இணைவு கொண்டுள்ளது. அது சபைகூடிவரும் கூடாரம் மற்றும் அபிஷேகிக்கப்பட்ட பணிமுட்டுகள் மற்றும் பாத்திரங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்ட அபிஷேகத்தைலம் செய்வதற்கான கூட்டுப்பொருள்களில் ஒன்றாக இருந்தது. ஆரோனும் அவரது குமாரர்களும், இந்தத் தைலத்தைக் கொண்டு அபிஷேகிக்கப்பட்டனர் (யாத்திராகமம் 30:22-32). வெள்ளைப்போளம் என்பது கர்த்தருக்குப் பரிசுத்தமானதாக இருந்தது, அது வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தக் கூடாததாக இருந்தது.

புளித்த திராட்சரசத்துடன் வெள்ளைப்போளம் கலக்கப்பட்டு, இயேசு சிலுவையில் தொங்கியபோது அவரது வேதனையைக் குறைப்பதற்காக அவருக்குத் தரப்பட்டது (மாற்கு 15:23). நிக்கொதேமு என்பவர் இயேசுவின் உடலை அடக்கம் செய்ய ஆயத்தப்படுத்துவதற்காக வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்த கலவையைக் கொண்டு வந்தார் (யோவான் 19:39, 40). பாடுகள் மற்றும் மரணம் ஆகியவற்றுடன் வெள்ளைப்போளத்தின் இணைவினிமித்தம், சிலர் அந்தக் கொடையானது மனித மீட்புக்கு வழிவகையாக இயேசுவின் பாடுகள் மற்றும் மரணம் ஆகியவற்றின் தீர்க்கதரிசனப் பிரதிநிதித்துவமாக இருந்தது என்று நம்புகின்றனர்.[5] இந்தக் கொடைகள் அவற்றின் தோற்றக்காலத்தில், அவற்றைக் கொடுத்தவர்களுக்கு, இப்படிப்பட்ட குறிப்பான, தீர்க்கதரிசன அர்த்தங்களைக் கொண்டிருந்தனவா இல்லையா என்பது கேள்விக்குரியதாக உள்ளது; ஆனால் அவைகள் ஆராதிப்பவர்களின் பகுதியில் பலியைப்

பிரதிநிதித்துவப்படுத்தின என்பது கேள்வியற்றதாக இருந்தது. அவைகள் அவர்களின் "பொக்கிஷங்களில்" இருந்து தரப்பட்டன (மத்தேயு 2:11).

தூபவர்க்கமும், வெள்ளைப்போளமும் ஆசாரியத்துவத்திற்கே உரிய கொடைகளாக இருந்தன. ஆசாரியர்கள் தேவனுக்கு எப்போதுமே சுகந்த வாசனையாக இராத வாழ்வைக் கொண்ட மக்களின் சார்பாக தேவனை அணுகுவதற்கு இந்தப் பொருட்களைப் பயன்படுத்தினர். தூபவர்க்கமும் வெள்ளைப்போளமும், பாவம், மரணம், மற்றும் மோசமான நடக்கை ஆகியவற்றின் துர்நாற்றத்தை மூடிமறைத்தன. வெளிப்படுத்தின விசேஷத்தில், தூபவர்க்கத்தின் புகையானது பரிசுத்தவான்களின் ஜெபத்துடன் அடையாளம் காணப்பட்டது, இது தேவனுக்கு முன்பாக சுகந்த-வாசனையாக எழும்பிச் சென்றது (வெளிப்படுத்தின விசேஷம் 5:8; 8:3, 4). தாவீது "என் விண்ணப்பம் உமக்கு முன்பாகத் தூபமாகவும், என் கையெடுப்பு அந்திப்பலியாகவும் இருக்கக்கடவது" என்று கூறியபோது (சங்கீதம் 141:2) இதே தொடர்பை ஏற்படுத்தினார்.

## விலையுயர்ந்த கொடை

ஒரு பலி என்பது நாம் வைத்துக்கொள்ள விரும்பும் - விலையுயர்ந்த பொருளாக இருக்க வேண்டும். இல்லையென்றால், அது ஒரு பலியாக இருப்பதில்லை. தாவீதின் வாழ்வில் நடந்தவற்றில் இரு நிகழ்ச்சிகள் இந்த சத்தியத்தை விவரிக்கின்றன. அவற்றில் ஒன்று பெலிஸ்தர்கள் எருசலேம் தொடங்கி பெத்லகேம் வரையில் விரிந்திருந்த ரெப்பாயீம் பள்ளத்தாக்கில், முகாமிட்டிருந்தபோது நடைபெற்றது. பெலிஸ்தர்கள் பெத்லகேமில் படைத்துருப்புகளின் குழுவைக் கொண்டிருந்தனர். தாவீது தமது பலத்த கோட்டையான அதுல்லாம் என்ற இடத்தில் இருந்தார். தாவீது பெத்லகேமின் கிணற்றில் இருந்த தெளிந்த, குளிர்ந்த நீருக்காகத் தாகம் கொண்டிருந்தார், அந்தக் கிணறு பெத்லகேமின் ஒலிமுகவாசலில் இருந்தது. அவரது அர்ப்பணிப்புக்கொண்ட மூன்று மனிதர்கள் தாவீதின் விருப்பத்தை நிறைவேற்ற விரும்பி, பெலிஸ்தரின் படைகளை ஊடுருவிச் சென்று, அந்தக் கிணற்றில் இருந்து தண்ணீரை எடுத்து அதைத் தாவீதுக்குக் கொடுக்கத் தங்கள் உயிரைப் பணயம் வைத்தனர் (2 சாமுவேல் 23:13-17).

தாவீது அந்தத் தண்ணீரை விரும்பினார், ஆனால் அதை அவர் குடிக்கவில்லை. அதற்குப் பதிலாக, அதை அவர் கர்த்தருக்கென்று ஊற்றினார். அவர் தமது மனிதர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்துக் கொண்டு வந்த தண்ணீரைத் தமக்குப் பயன்படுத்த விரும்பாதிருந்தார். உயிரைப் பணயம் வைத்துக் கொண்டுவரப்பட்ட அப்படிப்பட்ட கொடைக்குக், கர்த்தரே பாத்திரராக இருந்தார். தாவீது, "கர்த்தாவே, தங்கள் பிராணனை எண்ணாமல் போய்வந்த அந்த மனுஷரின் இரத்தத்தைக் குடிக்கும் இந்தச்செயல் எனக்குத் தூரமாயிருப்பதாக?" என்று கூறினார்.

இரண்டாவது உதாரணம் 2 சாமுவேல் 24ல் காணப்படுகிறது. அங்கு, தேவன் தாவீது மக்களைத் தொகைபார்த்ததினால் தமக்கு வெறுப்பு

*உண்டாக்கினதின் நிமித்தம், இஸ்ரவேல் மக்கள்மீது கொள்ளை நோயை வரப்பண்ணினார் (வசனம் 15). நாடு முழுவதிலும் எழுபதாயிரம் ஆண்கள் இறந்தனர். கர்த்தரிடத்தில் தாவீது, "இதோ, நான்தான் பாவஞ்செய்தேன்; நான்தான் அக்கிரமம்பண்ணினேன்; இந்த ஆடுகள் என்ன செய்தது? உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருப்ப தாக" என்று கூறினார் (வசனம் 17). காத் என்ற தீர்க்கதரிசி தாவீதிடம் வந்து, அவரை எபூசியனான அர்வனா என்பவரின் களத்திற்குச் சென்று தேவனுக்குப் பலிசெலுத்தும்படி கூறினார். தாவீது பலிசெலுத்துவதற்காக அந்தக் களத்தை அர்வனாவிடத்தில் இருந்து விலைக்கு வாங்க விரும்பினார். அர்வனா, தாவீது விரும்பும் எதையும் - தகனபலிக்கு மாடுகளும், விறகுக்குப் போரடிக்கிற உருளைகளும், மாடுகளின் நுகத்தடிகளும் ஆகிய எல்லாவற்றையும் - அவருக்கு [இலவசமாக] கொடுப்பதாகக் கூறினார். அதற்குத் தாவீது, "அப்படியல்ல; நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகன பலிகளைச் செலுத்தாமல், அதை உன் கையிலே விலைக்கிரயமாய் வாங்குவேன்" என்று கூறினார் (வசனம் 24).*

*மிருகஜீவன்களை வளர்த்துள்ள எவரும், தமது சொந்த மாட்டு அல்லது ஆட்டு மந்தையில் மிகச்சிறந்தவற்றைத் தமக்கென்று வைத்துக் கொள்ளும்படி சோதிக்கப்படுதலைப் புரிந்துகொள்ள இயலும். மோசேயின் பிரமாணத்தின்கீழான பலிசெலுத்தும் முறைமையில், உரிமையாளர் காத்து வைத்துக்கொள்ள மிகவும் விரும்பும் மிருகம்தான் ஒவ்வொரு ஆண்டிலும் தேவன் பலியாகக் கேட்பதாக இருந்தது (எண்ணாகமம் 18:29). பலி என்பது விலைமதிப்பு வாய்ந்த கொடையாக இருந்தது. ஆராதனையில் தேவனுக்கு விலையுயர்ந்த கொடைகள் உள்ளடங்குகின்றன. நாம் நமக்காக வைத்துக்கொள்ள முடியாதவற்றிற்கு மாறாக, நம்மிடம் உள்ளவற்றில் மிகச்சிறந்தவற்றைத் தேவனுக்குக் கொடுத்தல் என்பது, நாம் அவரில் நம்பிக்கை கொள்ளும்படி நம்மை வழிநடத்துகிறது.*

## ஆசாரியர்களால் அளிக்கப்பட்ட கொடை

*கிறிஸ்தவத்திற்கு-முற்பட்ட காலத்தில் பலிகள் ஆசாரியர்களால் அளிக்கப்பட்டன. ஆசாரியர்கள் மாத்திரமே பலியுடன் தேவனை அணுக அனுமதிக்கப்பட்டனர். இங்கு கிறிஸ்தவ ஆராதனையின் மிக முக்கியமான அர்த்தம் நிறைந்த கருத்துப்பொருள்களில் ஒன்று காணக்கிடக்கிறது. சிலுவையில் இயேசுவின் மரணம், பரிசுத்த ஸ்தலத்திற்கும் (சபைக்கும்) மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் (தேவனுடைய சிங்காசனத்திற்கும்) இடையில் இருந்த திரையைத் திறந்து வைத்தது. இயேசு மரித்த நேரத்தில், தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது (மத்தேயு 27:50, 51), இது இவ்விரு இடங்களுக்கும் இடையிலான தடையை நீக்கியது. இது முன்பு ஆசாரியர்கள் செய்தவிதமாகவே தேவனை அணுக அவரது சீஷர்களுக்கு வழியைத் திறந்து வைத்தது. நமது பிரதான ஆசாரியரான இயேசு, "ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" (எபிரெயர் 9:12ஆ). அவர் "எல்லா*

*காலத்திற்கும் பாவங்களுக்காக ஒரே ஒரு பலியை மாத்திரமே செலுத்த வேண்டியது அவசியமாய் இருந்தது" (எபிரெயர் 10:12). நமது பிரதான ஆசாரியரான அவர், தம்மையே பாவத்திற்குப் பலியாகச் செலுத்தியதால், நாம் இதற்கு முன்பு ஆசாரியர்களுக்கு மாத்திரம் தரப்பட்டிருந்ததான தைரியத்துடன் கிருபாசனத்தை அணுகுதல் என்ற செயலைச் செய்யமுடியும் (எபிரெயர் 4:16; 10:21, 22).*

*இது எதை அர்த்தப்படுத்துகிறது என்று நீங்கள் உணர்ந்து அறிகிறீர் களா? கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள் ஆசாரியர்களாக இருக்கின்றனர்! இதற்கு முன் ஆசாரியர்கள் மாத்திரமே நிற்பதற்கு அனு மதிக்கப்பட்டிருந்த இடத்தில் இப்போது நாம் நிற்க முடியும். தேவனுடைய உண்மையான ஆராதனையாளர்கள் "அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும்" இருக்கின்றனர் (1 பேதுரு 2:9). அவரது புண்ணியங்களை அறிவித்தல் என்பது அவரைத் துதித்தலாக உள்ளது!*

*தேவன் கிறிஸ்துவுக்குள் ஆசாரியத்துவத்தை மாற்றினார் என்பது, எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் முக்கிய கருத்துகளில் ஒன்றாக உள்ளது. பழைய ஏற்பாட்டு முறைமையின்படியான ஆசாரியர்கள், லேவி கோத்திரத்தில் இருந்து வந்தவர்களாக இருக்கையில், இயேசு யூதா கோத்திரத்தில் இருந்து வந்தவராக இருந்தார் (எபிரெயர் 7:11-19). அங்கு ஒரு புதிய ஆசாரியத்துவம் இருந்தது மாத்திரமின்றி, ஆசாரியத்துவ முறைமை முழுமையும் மாற்றப்பட்டும் இருந்தது: இன்றைய நாட்களில், அது சபை முழுவதாலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆசாரியர்கள் என்ற வகையில், கிறிஸ்தவர்கள் தேவனுக்கு நமது ஆராதனையின் மூலமாக பலி செலுத்தும் பணிப்பொறுப்பைக் கொண்டு கட்டளையிடப்பட்டு இருக்கிறோம்.*

*யோவான், தமக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றைப் பதிவு செய்யத் தொடங்குகையில், இயேசுகிறிஸ்து "தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினார் ..." என்று உறுதிப்படுத்தினார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:6). பின்பு, அவர் "அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்" என்ற ஆராதனைநிறைந்த சொற்றொடரை வெளிப்படுத்தினார் (1:6). பிற்பாடு, 5:10ல், அவர் பரலோகத்தின் ஜீவன்கள் சிங்காசனத்தைச் சுற்றிலும் நின்று, பின்வரும் பல்லவியுடன் ஒரு புதுப்பாட்டைப் பாடுவதைச் சித்தரித்தார்: "எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம்." "ஒவ்வொரு கோத்திரத்திலும், ஒவ்வொரு பாஷைக்காரரிலும், ஜனங்களிலும் ஜாதிகளிலும் இருந்து" ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலே தேவனுக்காகக் கிரயம்கொள்ளப்பட்டவர்கள் (5:9), தேவன் யாராக இருக்கிறார், அவர் செய்துள்ளவை என்ன, மற்றும் அவர் நமக்காகச் செய்கிறது என்ன*

என்பவற்றினிமித்தம் ஆசாரியர்களின் ராஜ்யமாக்கப்பட்டுள்ளனர். இதை அறிந்து விசுவாசித்தல் என்பது சர்வவல்லவரை ஆராதித்துத் துதிக்க நம்மை முழந்தாளிடச் செய்கிறது. ஆசாரியர்கள் என்ற வகையில், "நாம் இவ்விஷயத்தில் இனியும் பார்த்துக்கொண்டிருப்பவர்களாக இருக்க இயலாது; நாம் பங்கேற்பாளர்களாக இருக்க வேண்டும்."[6]

வெளிப்படுத்தின விசேஷத்தின் இந்தப் பகுதி பற்றிய ஒரு கலந்துரையாடலைத் தொடர்ந்து, ஜேக் ஹேஃபோர்டு என்பவர் 1 பேதுரு 2:9ன்மீது விளக்கம் அளித்தார்: "இவ்வசனத்தில் 'ராஜ்யம்' மற்றும் 'ராஜரீகம்' என்ற வார்த்தைகள், ஆராதனையின் ஆசாரியத்துவ ஊழியத்திற்கு ஒரு மேன்மை வாய்ந்த அம்சத்தைத் தெளிவாகச் சுட்டிக்காண்பிக்கின்றன. இவ்விதமாக, கிறிஸ்துவுக்குள் நமது வாழ்வின் முக்கியமான பகுதியில், அவருக்குள் நமது ஆளுகையானது அவரை நாம் ஆராதித்தலுடன் நேரடியாக உறவுபடுத்தப்படுதல் என்பதை உணர்ந்தறியும் வேண்டுகோள்களாக உள்ளது."[7] இவ்வசனப் பகுதிகளில் உள்ள பல சொற்றொடர்கள் யாத்திராகமம் 19:5, 6ல் இருந்து நேரடியாக வருகின்றன. மோசே சீனாய் மலையின் மீதேறிச் சென்றபோது, அவருக்குத் தேவன் மக்கள் தமது சொந்த உடைமையாக இருப்பார்கள், அவர்கள் ராஜரீக ஆசாரியக்கூட்டமாகவும் பரிசுத்த ஜாதியாகவும் இருப்பார்கள் என்று அவர்களிடத்தில் கூறும்படி அறிவுறுத்தினார். இஸ்ரவேலுக்குத் தொடக்கத்தில் தேவன் விருப்பம் கொண்டிருந்த அந்த விஷயமானது இப்போது, இன்றைய நாட்களில் தேவனை உண்மையாக ஆராதிப்பவர்களான சபைக்கு கிடைக்கிறது.

## உயிருள்ள கொடை

தேவனுக்குப் பலிசெலுத்துவதைப் பற்றி நினைக்கையில், இன்றைய நாட்களில் ஆராதிப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் பணத்தைக் காணிக்கையாகச் செலுத்துதல் என்ற வகையிலேயே நினைக்கின்றனர். அது தியாகமான கொடுத்தலாக இருந்தால், இவ்வகையான பலியின் முக்கியத்துவத்தை நான் குறைத்துப்போடமாட்டேன். சிலவேளைகளில், நமது நிதிநிலை ஆதாரங்களில் இருந்து கொடுத்தல் என்பது நமது தியாகமான ஆராதனையின் பகுதியாக இருக்க வேண்டும். இருப்பினும், நாம் நமது உடைமைகளைக் கொடுக்க வேண்டும் என்பதை தேவன் மிக அதிகமாக விரும்புவதில்லை என்ற விஷயம் வேதவசனங்களைப் படிப்பதில் தெளிவாகிறது. அவர் நமது பொருளாதார ஆசீர்வாதங்களை விரும்புவதுமில்லை, அது அவருக்குத் தேவையுமில்லை. உடைமைகள் என்பவை கொடுப்பதற்கு மிகவும் சுலபமான "பொருளாக" உள்ளன. பேதுருவும், அந்திரேயாவும் தங்களுக்குக் கிடைத்த முதல் அழைப்பின் பேரில், தங்கள் வலைகளை விட்டுவிட்டு, இயேசுவைப் பின்தொடர்ந்தனர் (மத்தேயு 4:18-20), ஆனால் அவர்கள் தங்கள் வாழ்வையே கொடுக்க அழைக்கப்பட்டிருந்ததை பிற்பாடு மிகவிரைவில் உணர்ந்தறிந்தனர்.

மனிதர் தம்மைத் தமக்காக வைத்துக்கொள்ளுதல் என்பது, மனிதர் தேவனைப் புறக்கணித்தல் என்ற செயலின் இருதயம் போன்ற மையப் பகுதியாக உள்ளது! இதுவே முதல் பாவத்திற்குக் காரணமாயிற்று

என்று நான் நம்புகிறேன். தேவன் தாம் படைத்திருந்த பூமியின்மீது ஆளுகையை ஆதாமுக்குக் கொடுத்தார் (ஆதியாகமம் 1:26). பூமியை மனிதன் ஆளுகை செய்தல் என்பது, மனிதனின் இருதயத்தில் தேவனுடைய ஆளுகையைச் சார்ந்ததாக இருந்தது. ஆதாம் தமது வாழ்வில் தேவனுடைய ஆளுகையை உதறித்தள்ளுதலைத் தேர்ந்துகொண்டபோது, அவர் பூமியின்மீதான தமது ஆளுகையையும் உதறித்தள்ளிவிட்டார். கிறிஸ்துவுக்குள், ராஜ்யத்தின் மக்கள் மீண்டும் ஒருமுறை தங்களைக் கிறிஸ்துவின் ஆளுகைக்கு ஒப்புக்கொடுப்பதன்மூலம் அந்த ஆளுகையை மீட்டுக்கொள்ள முடிகிறது. "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ["சாந்த குணமுள்ளவர்கள்"; NKJV - எஜமானரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டவர்கள்], அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்" (மத்தேயு 5:5).

ஆஸ்வால் சேம்பர்ஸ் என்பவர், ''மக்கள் கொடுத்துவிட வேண்டும் என்பதற்காக பொருட்களைக் கொடுத்துவிட வேண்டும் என்று தேவன் எவ்விடத்திலும் கூறுவதில்லை. அவர் நம்மிடத்தில், நாம் கொண்டிருக்கத் தகுதியான - அவருடன் வாழுதல் என்ற - ஒரே விஷயத்தின் நிமித்தமாகவே அவற்றைக் கொடுத்துவிடும்படி கூறுகிறார்'' என்று கூறியதற்காகப் பாராட்டைப் பெறுகிறார்.[8] இந்த தியாகமானது அனேகமாக ரோமர் 12:1ல் மிகச்சிறப்பாக விவரிக்கப்படுகிறது. 11ம் அதிகாரம் தேவனுடைய ஞானம் மற்றும் அறிவுக்காக அவரைத் துதித்தலுடன் முடிகிறது: "அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.'' 12ம் அதிகாரம் ''அப்படியிருக்க,'' என்று தொடங்குகிறது, இது மேற்கூறப்பட்ட அதே சிந்தனை தொடரப்படுவதை அர்த்தப்படுத்துகிறது. அதாவது, தேவனுடைய அறிவும் ஞானமும் அளவிடப்படாதவைகள் என்பதை நமது சிந்தையில் காத்துக்கொண்டு, நாம் "தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு, [நமது] சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும், இதுவே [நாம்] செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" என்று வேண்டிக் கொள்ளப்படுகிறோம். தேவன் ஒருமுறை கொடுக்கப்பட்டபின், மீண்டும் ஒருக்காலும் கொடுக்கப்பட முடியாததான, மரித்த பலியொன்றை விரும்புவதில்லை. அவர் நம்மையே விரும்புகிறார்; அவர் நமது வாழ்வை விரும்புகிறார்! ஆசாரியத்துவ ஆராதனை செய்பவர்களைக் கொண்ட முழுமையான ராஜ்யமே அவரது விருப்பமாக உள்ளது. நமது சுயத்தைப்-பலிசெலுத்துதல் என்பதற்கு தேவனுடைய தன்மானத்தைத் தாக்குதல் அல்லது உயர்த்திக்கொள்ளும் உரிமைகளை அவருக்குக் கொடுத்தல் என்பது நோக்கமாயிருப்பதில்லை. நம்மையே கொடுத்தல் என்பது மாத்திரமே நாம் அவருக்குக் கொடுப்பதற்கு உரிமைகோரக்கூடிய ஒரே வழியாக இருப்பதால்தான் அவர் நம்மையே அவருக்குக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார் (மத்தேயு 16:25).

இந்தக் கொள்கை பரலோக சேனைகளின் ஆராதனை வழிமுறையினால் விவரிக்கப்படுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 4:10ல், நாம் அவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாகத் தங்கள் கிரீடங்களை

*வைத்தனர் என்று வாசிக்கிறோம், அவர்கள் அதிகாரம் மற்றும் ஆளுகை ஆகியவற்றின் அடையாளங்கள் யாவற்றையும் சிங்காசனத்தில் அமர்ந் திருப்பவருக்குப் பலியாகச் செலுத்தினர். அவர்கள் அதிகாரம் மற்றும் ஆளுகை ஆகியவற்றின் தங்கள் சொந்தப் பதவிகளைப் பலியாகச் செலுத்தினர்.*

*பவுல் கடைசியாகப் பதிவுசெய்த தமது வார்த்தைகள் சிலவற்றில் இந்த சத்தியத்தை விவரிக்கிறார். அவர் விரைவில் தாம் கர்த்தருடன் இருக்கச் செல்லப்போவதை அறிந்தநிலையில், "ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது" என்று தீமோத்தேயுவுக்கு எழுதினார் (2 தீமோத் தேயு 4:6). அவர் தமக்காகத் தமது கர்த்தர் பலிசெலுத்தியிருந்த அதே பொருளை - தமது வாழ்வை - பலியாகச் செலுத்தினார்.*

*எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரும் "அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை"ப் பற்றிப் பேசினார் (13:15). அவர் தொடர்ந்து, "அன்றியும் நன்மைசெய்யவும், தான தர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்" என்று கூறினார் (13:16). இவ்வசனத்தின் முதல் பகுதியானது ஓசியா தீர்க்கதரிசியினால் கூறப்பட்ட ஒரு கூற்றை எதிரொலிக்கிறது: "வார்த்தைகளைக்கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவரை நோக்கி: தேவரீர் எல்லா அக்கிரமத்தையும் நீக்கி, எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும்; அப்பொழுது நாங்கள் எங்கள் உதடுகளின் காளைகளைச் [கனிகளைச்] செலுத்துவோம்" (ஓசியா 14:2).* King James Version *மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு வேதாகமம் ஆகியவற்றில், "அப்பொழுது நாங்கள் எங்கள் உதடுகளின் காளைகளைச் செலுத்துவோம்" என்றுள்ளது. இவ்வசனத்தைப் பற்றி பாப் மம்ஃபோர்டு என்பவர் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:*

> *மோசேயினால் ஏற்படுத்தப்பட்டபடியாக, தோற்றக்காலப் பலியானது, கன்றுக்குட்டிகள், காளைகள், இளம் வெள்ளாடுகள், மற்றும் காட்டுப்புறாக்கள் ஆகியவற்றைச் செலுத்தக் கேட்டது. இருப்பினும், இவைகள் அளிக்கப்படும்போது ஒருவரின் இருதயம் அந்த பலிக்குள் இருப்பதில்லை. மக்களிடத்தில் தேவன், தமக்கு முன் நின்று, "தேவனே, நான் உமக்குத் துதியின் பலியை ... எனது உதடுகளின் காளைகளைக்கூடச் செலுத்துகிறேன். ஆண்டவரே உம்மை ஆராதிக்கிறேன்" என்று கூறக்கூடிய, மக்களை எதிர்பார்த்த தாகத் திரும்பத் திரும்ப கூறினார்.*[9]

*பிறரிடத்தில் தயவுள்ள செயல்களும் தேவனுடனான நமது ஆசாரியத்துவ உறவுகளின் மகிழ்வைப் பகிர்ந்துகொள்வதும் தேவனுக்குப் பிரியமான பலிகளில் உள்ளடங்குகின்றன. இருதயத்தின் பலிகளே ஜீவனுள்ள பலிகளாக உள்ளன. ஞானிகள் தங்கள் பொக்கிஷங்களில் இருந்து இயேசுவுக்கு எடுத்துக் கொடுத்தனர். இயேசு, "உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" என்று கூறினார் (மத்தேயு 6:21). தேவன் இருதயத்தின் பொக்கிஷங்கள் தமது*

சித்தத்திற்கும் நோக்கங்களுக்கும் பலிசெலுத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறார். இல்லையென்றால், நமது இருதயங்களில் பொக்கிஷமாக நாம் வைத்திருக்கும் அந்த விஷயங்கள் தேவனுக்கும் நமக்கும் இடையில் நிற்கக் கூடும். தாவீது தேவனை தமது இருதயத்தை அறிந்திருப்பவர் என்று உணர்ந்தார். அவர், "தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை, ..." என்று கூறினார் (சங்கீதம் 51:17). ஆராதனை என்பது இருதயத்தின் பொக்கிஷங்களை ஒப்புவிப்பதின் (பலிசெலுத்துதலின்) செயல்முறையாக உள்ளது. அது பூமிக்குரிய பொக்கிஷங்களின்மீதான உங்கள் நம்பிக்கையை நொறுக்கி, அவர்மீது முழுமையான நம்பிக்கை வைத்தலின் அழியாத சமாதானம் மற்றும் மகிழ்ச்சியினால் உங்களை நிரப்பும்.

## முடிவுரை

தேவனை ஆசாரியத்துவ முறையில் ஆராதிப்பவராக இருக்க வேண்டும் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவருக்குமான உயர்ந்த அழைப்பாக உள்ளது (1 பேதுரு 2:5). பலியற்ற ஆராதனை எதுவும் உண்மையில் ஆராதனையே அல்ல. தியாகமான ஆராதனை பற்றிக் குறைந்தபட்சம் மூன்று சத்தியங்களை நினைவுகூரும்படிக்கு நாம் நாட வேண்டும்.

1. அன்பு என்பதே பலியின் உயர்ந்த நோக்கமாக உள்ளது. ஒரே வீட்டில் வசித்த இரு வேசிகளை சாலொமோன் எதிர்கொண்டார். ஒவ்வொருவரும் ஒரு பிள்ளையைக் கொண்டிருந்தனர்; ஆனால் அவர்கள் தூங்குகையில் ஒருத்தி தனது குழந்தையின்மீது படுத்துவிட்டாள். அவள் இறந்துபோன தன் குழந்தையை எடுத்து இன்னொரு பெண்ணிடம் கிடத்திவிட்டு, அவளது உயிருள்ள குழந்தையைத் தனக்குச் சொந்தமாக எடுத்துக்கொண்டாள். உயிருள்ள குழந்தை தன்னுடையது என்று இருவருமே உரிமை கோரினர். சாலொமோன் இந்த வழக்கைக் கேட்டு அதைத் தீர்த்து வைக்க மிகச்சிறந்த வழியொன்றைத் தீர்மானித்தார்: அவர் உயிருள்ள குழந்தையைச் சரிபாதியாக வெட்டி, ஒவ்வொரு பெண்ணுக்கும் பாதிக் குழந்தையைக் கொடுப்பதாக அறிவித்தார். அப்பெண்களில் ஒருத்தி, "ஆண்டவனே, குழந்தையை அவளுக்கே கொடுத்துவிடும், எவ்வகையிலும் அவனைக் கொல்ல வேண்டாம்" என்று கூறினாள். இன்னொரு பெண்ணோ, "அந்தக் குழந்தை எனக்கும் வேண்டாம், இவளுக்கும் வேண்டாம்; அவனை வெட்டிப்போட வேண்டும்!" என்று கூறினாள். அப்போது உண்மையான தாய் யார் என்று சாலொமோன் அறிந்தார். அன்பு மாத்திரமே அவளைத் தனது குழந்தை உயிருடன் இருக்கும்படி விட்டுக் கொடுத்துவிட அனுமதித்திருக்க முடியும் (1 இராஜாக்கள் 3:16-28). தேவன்மீது இருக்கக்கூடிய உண்மையான அன்பு மாத்திரமே நமது பொக்கிஷங்களை அவருக்குக் கொடுத்துவிடும்படி நம்மைத் தூண்ட முடியும்.

2. நன்றியுடைமை என்பது பலியின் மாபெரும் நற்பண்பாக உள்ளது. "ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்" (எபிரெயர் 12:28).

தேவன் யார், அவர் நமக்காகச் செய்துள்ளது என்ன, மற்றும் அவர் நமக்காகச் செய்துகொண்டிருப்பது என்ன என்பதை நாம் முழுமையாக உணரும் போதுதான், உண்மையிலேயே நாம் நன்றிநிறைந்தவர்களாக இருக்க முடியும். தங்களுக்கு ஒரு இரட்சகர் தேவை என்பதை உணர்ந்து அறிந்து அவரது மீட்பின் கொடையை நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்பவர்கள் மட்டுமே ஆராதனை செய்யக் காரணத்தைக் கொண்டுள்ளனர்.

*3.* நமது "சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக, ..." ஒப்புக்கொடுத்தல் என்பதே நிறைவான பலியாக உள்ளது (ரோமர் 12:1). நமது ஆண்டவரும் அரசருமாகிய, பிரதான ஆசாரியர், தம்மையே நமக்காகப் பலியாக ஒப்புக்கொடுத்தார். அவருக்கு நம்மையே பலியாகப் பலிபீடத்தில் ஒப்புக்கொடுத்தல் என்பதைக் காட்டிலும் குறைவான ஏதொன்றிற்கும் நமது ஆராதனை நம்மை அழைப்பதில்லை. 'இயேசுவைப்போல, நாம், நமது ஆவியைப் பிதாவின் கரங்களில் ஒப்புவித்து, அது பரிசுத்த ஆவியானவரின் அக்கினியில் முற்றிலுமாகப் பட்சிக்கப்பட அனுமதிக்கும்போது மாத்திரமே, நாம் அவரது பிரசன்னத் திற்குள் பிரவேசிக்க ஆயத்தமானவர்களாக இருக்கிறோம்."[10]

---

குறிப்புகள்

[1]W. L. Walker, "Frankincense," in *The International Standard Bible Encyclopedia*, ed. James Orr (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957), 2:1144. [2]Alfred P. Gibbs, *Worship: The Christian's Highest Occupation*, 2d ed. (Kansas City, Kans.: Walterick Publishers, n.d.), 45. [3]James P. Gills, *A Heart Aflame: The Dynamics of Worship* (Tarpon Springs, Fla.: N.p., n.d.), 75. [4]E. W. G. Masterman, "Myrrh," in *The International Standard Bible Encyclopedia*, ed. James Orr (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957), 3:2102-3. [5]Gibbs, 45. [6]Bob Mumford, *Entering and Enjoying Worship* (Ft. Lauderdale, Fla.: By the author, 1975), 47. [7]Jack Hayford, *Worship His Majesty* (Dallas: Word Publishing, 1987), 89. [8]*Elm Springs Bible College 1996-1997 Catalog* (Elm Springs, Ark.: Elm Springs Bible College, 1996), 18. [9]Mumford, 49. [10]Gills, 75.